## அரக்கோணம் நகராட்சி

## சிறப்பு மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண். 25 நாள் 18.05.2018.

பொருள் : சிறப்பு மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 18.05.2018 வெள்ளி க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 18.05.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சிறப்பு மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம் மற்றும் நகரம் சோம சுந்தரம் நகர், வார்டு டி, பிளாக் 33, நகர புல எண்.87–ல் மொத்த விஸ்தீரணம் 1.1925.0 ஹெக்டேரில் விஸ்தீரணம் 86 சதுர மீட்டர் பரப்பளவு தனியார் பட்டா நிலத்தை மட்டும் அரக்கோணம் நகர பாதாள சாக்கடை திட்டத்திற்காக பூமிக்கடியில் இணைப்புக் குழாய் பதிக்கும் நோக்கத்திற்காக தனியார் பேச்சுவார்த்தை மூலமாக அரக்கோணம் நகராட்சிக்கு நிலத்தை கிரையம் பெற்றுத்தர கோரப்பட்டதற்கிணங்க மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் செயல்முறை ந.க.எண்.ஜி2/7928/2018 நாள்.17.05.2018ன்படி நகராட்சிக்கு சொந்தமான சோம சுந்தரம் நகரப்பகுதியில், சாலையில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சேகரிப்பு அமைப்புடன் துணை உந்து நிலையத்தை இணைக்க குழாய் பதிக்க தேவையான நிலத்தில் சுமார் 30 மீட்டர் நீளம் கொண்ட நிலம் தனியாருக்கு சொந்தமானதாக உள்ளதால், குழாய் பதிக்கும் பொருட்டு, தனியார் பேச்சுவார்த்தை மூலம், கையகப்படுத்தப்படவுள்ள நிலத்தின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | வார்டு / பிளாக் | நகர புல எண் | மொத்த பரப்பு(ச.மீ) | கையகப்படுத்தப்படும் பரப்பு (ச.அ) | நில உரிமையாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு டி, பிளாக் 33 | 87 | 86 | 925.36 | காலம் சென்ற கோபால் என்பவரின் வாரிசுகள் (1) திரு.G.கிறிஸ்டி விஜயகுமார் த/பெ கோபால், (2) திருமதி.ஜி.செல்வி. க/பெ திரு. நோயல் பிரதாப் பிரபாகரன் (3) திருமதி. பியூலா. க/பெ திரு.ஜி. சாமுவேல் சத்யராஜ் (4) திருமதி..சங்கீதா க/பெ திரு. இ.ஆர்.எஸ்.குமார் அரக்கோணம் வட்டம். |

பிரஸ்தாப புலத்திற்கான நில மதிப்பு நிர்ணயம் செய்யும் பொருட்டு, மாவட்ட வருவாய் அலுவலர் முன்னிலையில் 10.05.2018 அன்று தனிநபர் பேச்சுவார்த்தை குழு உறுப்பினர்களான வேலூர் நகராட்சி நிர்வாகத்தின் மண்டல இயக்குநர், அரக்கோணம் மாவட்ட பதிவாளர், வேலூர் மண்டல நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக மேற்பார்வையாளர் மற்றும் நில உரிமையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அரசாணை நிலை எண்.281, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (நில நிர்வாகம் பிரிவு ) துறை நாள்.07.09.2017ன்படி தனியார் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்தப்படவுள்ள நிலத்திற்கான நில மதிப்பு நில உரிமையாளர்களின் ஒப்புதலின் பேரில் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வார்டு/ பிளாக் | நகர புல எண் | கையகப்படுத்தப் படும் பரப்பு (ச.அ) | வழிகாட்டி மதிப்பு (ரூ) | சந்தை மதிப்பு (ரூ) | நில உரிமையாளர் ஒப்புதலின் பேரின் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு (138%) | மொத்த நில மதிப்பு (ரூ) |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வார்டு டி, பிளாக் 33 | 87 | 925.36 | ரூ.342/ சதுர அடி | ரூ.500/ சதுர அடி | ரூ.500/— சதுர அடி | 4,62,680 |

மேற்படி அரசாணையின்படி மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அரக்கோணம் நகராட்சி ஆணையரின் கோரிக்கையின்படி பாதாள சாக்கடை அமைக்க குழாய் பதிக்கும் பொருட்டு, சதுர அடி ஒன்றுக்கு ரூ.500/— வீதம் 925.36 சதுர அடி நிலத்தை ரூ.4,62,680/— மதிப்பிற்கு நில உரிமையாளர்களிடமிருந்து அரக்கோணம் நகராட்சி ஆணையருக்கு கிரையம் பெற ஆணையிடப்பட்டுள்ளது.

கிரையம் பெற உள்ள மொத்த நிலத்தின் மதிப்பு நிர்ணயம்

| வ.எண் | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | நில மதிப்பு சதுர அடி 1க்கு ரூ.500/— வீதம் 925.36 சதுர அடி நிலத்திற்கு | ரூ.4,62,680/— |
| 2. | பதிவுக் கட்டணம் | ரூ.18507.20/— |
| | மொத்தம் | ரூ. 481187/— |

பாதாள சாக்கடை அமைக்க குழாய் பதிக்கும் பொருட்டு, தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் கிரையம் பெற உள்ள 925.36 சதுர அடி நிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கிரைய தொகையான ரூ.4,62,680/— யை நில உரிமையாளருக்கு வழங்கி நகராட்சி நிர்வாகம் பெயரில் பத்திரப்பதிவு செய்து பணியினை துவக்கிட உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) கிரையம் பெற உள்ள 925.36 சதுர அடி நிலத்தை அரக்கோணம் நகராட்சி பெயரில் பத்திரப்பதிவு செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை—05 அவர்களின் அனுமதி கோர மன்றம் அனுமதிக்கலாம்**

**3) நில உரிமையாளருக்கு வழங்க வேண்டிய கிரய மதிப்பு தொகை ரூ.462680/—யும், மற்றும் பதிவுக் கட்டணத் தொகை ரூ.18507.20யும் பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.2535/2006/இ1**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**